**மாவட்ட நீதிமன்றம், உதகமண்டலம்**

O.S. No. 54 of 2023

**பி.சா.1 ஜேம்ஸ் இன்று 11.08.2026 குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

**குறுக்கு விசாரணை :**

நான் உதகமண்டலம் மணிலாட்ஜ் ரோடில் குடியிருக்கிறேன். நான் குடியிருக்கும் வீட்டிற்கு என்ன வாடகை என்றால் நான் சொந்த வீட்டில் குடியிருக்கிறேன். நான் வாதியின் வீட்டில் மாதம் ரூபாய் 9ஆயிரம் வாடகைக்கு குடியிருந்து வருகிறேன் என்றால் தவறு. 12.01.2022 அன்று வாதிக்கு சொந்தமான அந்த வீட்டை பொறுத்து ஏற்பட்ட லீஸ் அக்ரிமெண்ட்டில் நான் கையொப்பம் போட்டுள்ளேன் என்றால் இல்லை, எனக்கு தமிழும் தெரியாது, ஆங்கிலமும் தெரியாது. எனக்கு அதன்பிறகுதான் அவ்வாறு அக்ரிமெண்ட் ஏற்பட்ட விவரம் தெரியும். அவ்வாறு ஒரு லீஸ் அக்ரிமெண்ட்டை நானும், வாதியும் நோட்டரி பப்ளிக் முன்னிலையில் ஏற்படுத்திக்கொண்டதில்தான் நான் கையொப்பம் போட்டேன் என்றால் தவறு. அந்த லீஸ் அக்ரிமெண்ட் அடிப்படையில் நான் வாடகை கொடுக்கவேண்டியதாக சொல்லி முன்சீப் கோர்ட்டில் O.S.64/2023 என்ற வழக்கை வாதி என்மீது தாக்கல் செய்துள்ளார் என்றால் அவ்வாறு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்பது உண்மை. அந்த வழக்கு தற்பொழுதும் நிலுவையில் உள்ளது என்பது சரி. என்மீது வாதி முன்சீப் கோர்ட்டில் O.S. 35/2023 என்ற வழக்கை உறுத்துக்கட்டளை

பரிகாரத்திற்காக தாக்கல் செய்துள்ளார் என்பது சரி. அந்த வழக்கில் நான் ஆஜராகி நடத்திவருகிறேன் என்பது சரி. அந்த வழக்கு இறுதியாக வாதி கோரியபடி தீர்ப்பாகிவிட்டது என்றால் இல்லை. O.S.35/2023 தீர்ப்புரையின் பேரில் அப்பீல் தாக்கல் செய்யவில்லை என்பது சரி. வாதி எனக்கு கொலை மிரட்டல் விடுத்ததால் நான் அப்பீல் தாக்கல் செய்யவில்லை. 2618 சதுர அடி விஸ்தீரணம் உள்ள நிலத்தை சங்கரன் மற்றும் பிரபாகரனிடம் நான் வாங்கியுள்ளேன் என்பது சரி. அந்த ஆவணத்தின் பதிவு எண் 648/2011 என்பது சரி. அந்த சொத்தை பொறுத்து இந்த வழக்கு நடைபெறுகிறது என்பது சரி. 12.01.2022ல் வாதிக்கு நான் அது சம்பந்தமாக அக்ரிமெண்ட் போட்டு கொடுத்தேன் என்றால் இல்லை. பணம் வாங்கியதற்காக அதை போட்டு கொடுத்தேன். அந்த அக்ரிமெண்ட் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது சரி. அதை பதிவு செய்யும்போது சப் ரிஜிஸ்டர் என்னிடம் அட்வான்ஸ் பணம் ரூபாய் 10 லட்சம் வாங்கிக்கொண்டதாக என்னிடம் கேட்டார் என்றால் இல்லை. அப்பொழுது என்  கை ரேகை பெற்றார்கள் என்றால் ஞாபகம் இல்லை. அந்த ஆவணத்தை பதிவு செய்யும்போது என் போட்டோ எடுத்தார்கள் என்பது சரி. என் போட்டோவும், என் கை ரேகையும் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தில் வரும் என்பது சரி. அந்த அக்ரிமெண்டை பதிவு செய்யும்போது நான் பணம் ரூபாய் 10 லட்சம் பெற்றுள்ளேன் என்பது சரி. மீத கிரைய தொகை ரூபாய் 2 லட்சத்தை வாதி

நீதிமன்றத்தில் செலுத்திவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தின் பதிவு எண் 39/2022 என்றால் எனக்கு தெரியாது. நான் குடியிருக்கும் வீட்டின் கதவு எண் 73/B1 என்பது சரி. அந்த கதவு எண் 73/B1 பொறுத்துதான் லீஸ் அக்ரிமெண்ட் போடப்பட்டது என்பது சரி. அந்த 6 செண்ட் நிலத்தின் சர்வே எண், T.S.No தெரியுமா என்றால் தெரியாது. அந்த 6 செண்ட் நிலத்தை வாங்கியபிறகு அது பொறுத்து ரெவின்யூ ரெக்கார்டுகளில் என் பெயருக்கு மாற்றிவிட்டேன் என்பது சரி. அந்த பணம் ரூபாய் 10 லட்சம் அக்கவுண்ட் மூலம் டிரான்ஸ்பர் செய்யப்பட்டது என்பது சரி.

14.06.2023 அன்று வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்பது சரி. அதற்கு நான் பதில் எதுவும் அனுப்பவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை. எதிர் வழக்குரையில் வாதி கெட்ட எண்ணத்துடன் செயல்கள் புரிந்துள்ளார் என்று கூறியுள்ளது தவறு என்றால் சரியல்ல. வாதியுடன் நான் அக்ரிமெண்ட் போட்டபோது வாதியின் கணவர் அரசு மியூசியத்தில் பணிபுரிந்தார் என்பது சரி. வாதியின் கணவர் ஆட்டோ டிரைவர் என்று எதிர்வழக்குரையில் நான் கூறியது பொய் என்றால் சரியல்ல. வாதியின் கணவர் எந்த காலத்திலும் யாருக்கும் கடன் கொடுத்தது இல்லை என்றும், அவர் கடன் வட்டிக்கு விடும் தொழில் செய்தது இல்லை என்றும் சொன்னால் தவறு. வாதியின் கணவரிடம் நான் கடன் பெற்றது கிடையாது

என்றால் தவறு. தாவா சொத்திற்கு உரிய மதிப்பை தெரிவித்துதான் கிரைய ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும், எதிர்வழக்குரையில் குறைவான மதிப்பு குறிப்பிடப்பட்டுள்ளதாக நான் கூறியுள்ளது பொய் என்றும் சொன்னால் தவறு. வாதி பலமுறை கேட்டும், வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியும் நான் கிரையத்தை ஒப்புக்கொண்டபடி முடித்துகொடுக்கவில்லை என்றால் தவறு. நான் வட்டி கொடுத்துக்கொண்டு இருந்தேன்.

**(வாதி தரப்பில் வேண்டியதால் குறுக்கு விசாரணை இத்துடன் நிறுத்தி வைக்கப்படுகிறது).**

A. Muraleedharan

Digitally signed by A. Muraleedharan
Date: 2026.08.11 16:29:55 +0530